எனவே, இனி நாம் புது வாழ்வை தொடங்க வேண்டியது இன்றியமையாததாகும். நாடுகளை உருவாக்கும் பணிக்குத் தேவையான ஊக்கத்தையும் உறுதியையும் எவ்வாறேனும் நாம் நம்முள் மீண்டும் ஒளிரச் செய்ய வேண்டும். இது நிகழ வேண்டுமெனில், நாம் பாரதத்தின் தனிப் பெருந் தன்மையைப் பற்றியும்,இன்றைய உலகில் நாம் வகிக்கும் இடம் மற்றும் நாம் ஆற்ற வேண்டிய பங்கைப் பற்றியும் தீர ஆராய்ந்து சிந்திக்க வேண்டும்.

ஸெண்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ் நிறுவனம் பாரதம் தன்னைத் தானே அறிந்து கொள்ளும் இந்த முயற்சியைத் தொடங்கவும், நாட்டை உருவாக்கும் பணியில் பாரத நாட்டினர் அனைவரும் உள்ளார்ந்த பற்றுடன் ஈடுபட வாய்ப்பளிக்கவல்ல ஒரு அரசமைப்பை வரையறுக்கும் நோக்குடனும் நிறுவப்பட்டுள்ளது.

மையத்தின் மற்ற வெளியீடுகள்:

***பாரதீய சித்த மானஸ ஏவம் கால***, *1993, ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில்*

***அயோத்யா அண்ட் தி ப்யூச்சர் இண்டியா***, *1993, ஆங்கிலத்தில்*

***இண்டியன் எகானமி அண்ட் பாலிடி***, *1995, ஆங்கிலத்தில்*

***அன்னம் பஹு குர்வீத***, *1996, ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில்*

*விலை ரூ.400/-*

*ஐ.எஸ்.பி.என். 81-86041-08-7*

*Centre for Policy Studies*

# அன்னம் பஹு குர்வீத

## உணவைப் பெருக்கிப் பகிர்ந்துண்ணும் பாரதீய சனாதன தருமம்

**ஜிதேந்த்ர பஜாஜ்**

**மண்டயம் தொட்டமனெ ஸ்ரீநிவாஸ்**

பாரதம் இன்று மிகுந்த உணவுப் பற்றாக்குறையினால் அவதிப்படுகிறது. பிரிட்டானிய ஆட்சி தொடங்கிய சில பத்தாண்டுகளுக்குள்ளாகவே இந்நாடு கிட்டத்தட்ட பஞ்ச நிலையை அடைந்துவிட்டது. அன்று முதல் இன்று வரையிலும் நாம் அதே நிலையிலேயே தங்கியுள்ளோம். இன்று பாரத மக்கள் உலகின் எந்தப் பகுதியில் உள்ள மக்களை விடவும் சுமார் மூன்றில் ஒரு பங்கு குறைவாகத்தான் அடிப்படை உணவுப் பொருட்களை நுகர்கிறார்கள். தவிரவும், பாரதத்தின் கால்நடைகளுக்கும் இதர விலங்கினங்களுக்கும் தானியங்களோ, கிழங்குகளோ ஒரு சிறிதளவும் கிடைப்பதில்லை என்றே கூறலாம். ஆயினும் நாம் தேவைக்கு அதிகமான உணவு உற்பத்தி செய்வதாகவே எண்ணத் துணிந்துள்ளோம்.

பாரதம் ஒருகாலும் பசி, பற்றாக்குறையைப் பற்றி இத்துணை சுரணையற்று இருக்கவில்லை. அன்னபாஹுல்யம் மற்றும் அன்னதானமே, அமோகமாய் உணவைப் பெருக்கி அதைத் தாராளமாகப் பலருடன் பகிர்ந்துண்ணுதலே எக்காலத்திலும் நமது தார்மீக வாழ்க்கையின் சாரமாய் இருந்து வந்துள்ளது. உண்மையில், அன்னபாஹுல்யமும் அன்னதானமுமே அடிப்படை தருமமாகும் ; மற்றனைத்தும், ஏன், மோட்சத்தின் நாட்டம் கூட இதன் மீதே அமைந்துள்ளது.

பாரதத்தின் மாபெரும் பரம்பரையான அன்னப்பெருக்கம் மற்றும் அன்னதானத்தை நினைவுகூர்தலே இப்புத்தகத்தின் நோக்கம். பாரதப் பண்பாட்டு தனிப் பெருந்தன்மையின் சிறந்த இலக்கியங்களாய்த் திகழும் வேத உபநிஷத்துகள், இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் தரும சாஸ்திரங்களை ஆதாரமாய்க் கொண்டு, இப்புத்தகம், அன்ன மிகுதி மற்றும் அன்னதானத்தைப் பற்றி பாரதத்தினர் கொண்டிருந்த ஆழ்ந்த சிந்தனைகளைத் தொகுத்தளிக்கிறது. இதனூடே, பாரதப் பண்பாட்டின் சாரத்தைப் பற்றிய புதியதோர் உணர்வினை அளிக்கிறது. இப்புத்தகத்தைப் பாரதத்தின் சில தலைசிறந்த ஆசாரியர்களின் பாதங்களில் சமர்ப்பித்துள்ளோம். இம்மகான்கள் இம்முயற்சியை ஆசீர்வதித்து, பாரதம் வெகு விரைவில் அன்னப் பெருக்கம் மற்றும் அன்னதானம் என்கிற தருமத்தில் மீண்டும் நிலைபெற ஆசிகள் வழங்கியுள்ளனர். இப்புத்தகத்திற்கு மங்களாசாஸனங்கள் அருளியுள்ள ஆசாரியர்கள் :

ஸ்ரீ ஜகத்குரு ச்ருங்கேரி ஸ்ரீமத்பாரதிதீர்த மஹாஸ்வாமிகள்
ஸ்ரீ கலியன் வானமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்
ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்ரீ நிஷ்சலானந்த ஸரஸ்வதி மஹாராஜ்
ஸ்ரீ ஸ்ரீ திரிதண்டி ஸ்ரீமந்நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்
ஸ்ரீ பேஜாவர அதோக்ஷஜ மடாதீச ஸ்ரீ விச்வேசதீர்த ஸ்வாமிகள்
விரக்த சிரோமணி பரமஹம்ஸ ஸ்ரீ ஸ்வாமி வாமதேவஜீ மஹாராஜ்
ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

**ஸெண்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ், சென்னை**

*ஐ.எஸ்.பி.என். 81-86041-08-7*

அன்னம் பஹு குர்வீத

உணவைப் பெருக்கிப் பகிர்ந்துண்ணும் பாரதீய சனாதன தருமம்

பஜாஜ்



# அன்னம் பஹு குர்வீத

ஜிதேந்த்ர பஜாஜ்

மண்டயம் தொட்டமனெ ஸ்ரீநிவாஸ்

**ஸெண்டர் பார் பாலிஸி ஸ்டடீஸ், சென்னை**

(கொள்கை ஆய்வு மையம், சென்னை)

ஒரு நாட்டை உருவாக்கும் பணியில் மக்களின் ஊக்கமும் விருப்பங்களும் மட்டுமே கருத்தில் கொள்ளத்தக்கன. ஒரு நாடு தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் தன் இலட்சியத்தை நோக்கிச் செல்லத் தீர்மானித்து விட்டதெனில், அதற்கு வேண்டிய கருவிகளையும் சாதனங்களையும் திரட்டுவது எளிதே. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் மகாத்துமா காந்தியின் தலைமையில் நம்முடைய சக்தி அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஒரு மாபெரும் தேசீய முயற்சியில் ஈடுபட்டபோது நாம் இத்தகைய தீவிர ஊக்கத்தையும் உறுதியையும் வெளிப்படுத்தினோம்.

ஆனால், சுதந்திரம் பெற்ற பிறகு மகாத்துமா காந்தி நம்முள் எழுப்பிய ஊக்கத்தையும் உறுதியையும் ஏனோ இழந்துவிட்டோம். நீண்டகால அடிமை வாழ்வினால் ஊறிப் போன மனச்சோர்வாலும் இயந்திரமாய் பிறரைப் பின்பற்றும் வலுக்கேடான பழக்கத்தாலும் முடங்கியுள்ளோம். இப்பொழுது ஐம்பது ஆண்டு காலமாகச் சுதந்திர பாரத நாடாய் விளங்கும் நாம் ஊக்கமில்லா வாழ்க்கையையே நடத்தி வருகிறோம். மேலை நாடுகளை கண்மூடித் தனமாகப் பின்பற்றுவதும், அவர்கள் நிலையை எட்டிப் பிடிக்க முயலுவதுமாய், இதற்கிடையே எவ்வாறோ நிகழ்காலத்தைச் சமாளித்தவாறே உயிரற்ற நடைப்பிணங்களாய்க் கிடக்கிறோம். நம் நாட்டின் நிலைமையையோ அல்லது நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் நிலைமையையோ அறிந்து கொள்ள உண்மையான முயற்சிகள் எவற்றையும் நாம் மேற்கொள்ளாமல் அவ்வப்போது எவை புதுப்பாணியென்று உலகச் சந்தையில் விளம்பரப் படுத்தப் படுகின்றனவோ அவற்றையே பின்பற்ற முயல்கிறோம் அல்லது, ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் விட்டுச் சென்றுள்ள அமைப்புகளும் நிறுவனங்களும் எவற்றை நம் மீது திணிக்கின்றனவோ அவற்றிற்கு ஏற்றாற் போலவே நம் வாழ்வை அமைத்துக் கொண்டு வருகிறோம்.

தொடர்ச்சி பின் அட்டையில்

*www.cpsindia.org*